**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 219 நாள்: 18.06.2026

**திரு.வி.க. நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-65, 68 மற்றும் 69க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி, பூங்கா மற்றும் நடைபாதை மேம்பாட்டுப் பணி, பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் செடி மற்றும் மரக்கன்றுகளை நடும் பணி, மயானபூமியில் மேம்பாட்டுப் பணி உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.06.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வார்டு-69க்குட்பட்ட 24 ஏ, குளம் பூங்காவைப் பார்வையிட்டு, பூங்காவில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்திலிருந்து வரும் குடிநீரின் தரம் குறித்தும், நடைபாதைகள், விளையாட்டு உபகரணங்கள், பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினையும், வார்டு-64க்குட்பட்ட ஜி.கே.எம். காலனி மயானபூமியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, பூங்கா மற்றும் மயானபூமிகளில் அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு பசுமையாகவும், தூய்மையாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**